# வீடிழந்த அகதிகளை எதிர்நோக்கும் பிரச்னை

Registered as a Newspaper in Ceylon ★ விலை சதம் 10

# ஈழநாடு

EELANADU

தபால்பெட்டி எண். 49
போன் 389

National Tamil Daily

மலர் 9
இதழ் 319
தேசிய தினசரி

யாழ்ப்பாணம் பிலவங்க மார்கழி 13 ரம்ழான் 25 வியாழக்கிழமை (28-12-67)

## ஜனவரி 4 க்குப்பின் எங்கே செல்வது?

யாழ்ப்பாணம், வியா. வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு வீடிழந்து, பாடசாலைகளில் தஞ்சமடைந்துள்ள நூற்றுக்கணக்கானகுடும்பங்களை பெரும்கஷ்டம் எதிர்நோக்கியுள்ளது.

இக்குடும்பங்களுக்கு இதுவரை நிவாரணம வழங்கப்படாததால் தொடர்ந்து பாடசாலைகளிலேயே வாழவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது.

யாழ்ப்பாண மாவட்டத்தில் இதுவரை வெள்ளத்தால் பாதிக்கப்பட்டஎந்தக் குடும்பத்திற்கும் நிவாரணம் வழங்கப்பட வில்லையெனத் தெரியவருகிறது. சிலபகுதிகளில் காரியாதிகாரிகளின் அறிக்கைகள் இன்னும்தயாரிக்கப்படவில்லை.

நாளை முதல் ஜனவரி 3-ம் திகதி முதல் ஆறுநாட்களுக்குத் தொடர்ந்து அரசாங்க

(5-ம் பக்கம் பார்க்க)

# 1967-ல் 6 லட்சம் ருத்தல் காய்கறி வடபகுதியிலிருந்து ஏற்றுமதி

## சென்ற வருடத்தைவிட இருமடங்கு அதிகம்

## தென் இலங்கையில் நல்லகிராக்கி

யாழ்ப்பாணம், வியாழன்

**வடஇலங்கையிலிருந்து தென்னிலங்கைக்கு சென்ற வருடத்திலும் பார்க்க இந்த வருடம் இருமடங்கு தொகையான மரக்கறி வகைகள் ஏற்றுமதிசெய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.**

65—66-ம் வருட இடைக்காலத்தில் வடயாகாண சந்தைப்பகுதியினர் 3லட்சத்து ஆயிரத்து 208றுத்தல் மரக்கறிவகைகளை ஏற்றுமதிசெய்தனர். 65—67ம் வருட இடைக்காலத்தில் 6 லட்சத்து 6ஆயிரத்து 433றுத்தல் மரக்கறிவகைகளை ஏற்றுமதி செய்தனர். கொழுமபில் ஆரம்பிக்கப்பட்ட குதிரைப் பந்தயத்திடல் சந்தையில் யாழ்ப்பாண மரக்கறிவகைகளுக்கு பெரும் கிராக்கி ஏற்பட்டுள்ளதாகவும், கடந்த மூன்று மாதத்தில் மட்டும் 1 லட்சத்து 70 ஆயிரம் றுத்தல் யாழ்ப்பாண மரக்கறி வகைகளை யாழ். மாவட்ட சந்தைப் பகுதியினர் விற்பனை செய்துள்ளதாகவும் யாழ்ப்பாண சந்தைப்பகுதி உதவிக் கமிஷனர் திரு. என். வாமதேவன் எமது நிருபரிடம் கூறினர். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சென்ற வருடம் யாழ்ப்பாணத்தில் இருந்து 2 லட்சம் றுத்தல் தக்காளிப்பழம் தென் இலங்கைக்கு ஏற்றுமதி செய்யப்பட்டது. இந்த வருடம் இங்கிருந்து ஏற்றுமதி செய்யப்பட்ட தக்காளிப்பழம் 3 லட்சம் றுத்தலாக உயர்த்தப்பட்டு நல்ல முன்னேற்றம் கண்டுள்ளது. வடமாகாணத்தில் சாவகச்சேரி, சுன்னாகம் ஆகிய இடங்களில் இருந்தே சந்தைப் பகுதியினர் அதிக அளவு மரக்கறி வகைகளைப்பெற்று தென்இலங்கையில் விற்பனை செய்கின்றனர். (வி.நி.)

## ரயிலில் மோதுண்ட வாலிபர் ஆஸ்பத்திரியில்

குரும்பசிட்டி, புதன் பூட்டப்பட்டிருந்த புகையிரதக் கடவையைக் கடந்து செல்ல முயன்ற வாலிபர், யாழ்தேவி புகைவண்டியுடன் மோதிப் பலத்த காயங்களுக்குள்ளானுர்.

மல்லாகம் புகையிரதக் கடவையில் நடைபெற்றுள்ள இவ்விபத்தில் சிக்குண்டவர் நாகலிங்கம் சுந்தரலிங்கம் (வயது20) என்ற வாலிப நபராவார்.

அருகாமையில் உள்ள சந்தியிலிருந்து சைக்கிள் வண்டியில் வந்துகொண்டிருந்த இவ்வாலிபர் கடவை பூட்டப்பட்டிருந்ததை அவதானித்த பின்னரும் கடக்க முற்பட்டபோது யாழ்தேவியுடன் மோதுண்டு விபத்துக்குள்ளானுர். உடனடியாக இவர் மோதுண்ட புகைவண்டி மூலமே யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கு அனுமதிக்கப்பட்டார்.

இவ்விபத்துக் குறித்து பொலிஸ் கான்ஸ்டபிள் குணரத்தினம் விசாரணை நடத்தினுர். சேதத்திற்குள்ளான சைக்கிள் பொலிஸ் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளது.

## வடமாகாண கல்லூரி அதிபர்கள் கோரிக்கை

யாழ்ப்பாணம், வியாழன்

வடமாகாணத்தில் உள்ள பாடசாலைகளில், ஆசிரியர்களின் இடமாற்றங்களினுல் ஏற்பட்டுள்ள குழப்பமானநிலை சீராகும் வரை, டிசம்பர் மாத விடுமுறைக்குப் பின்னர் பாடசாலைகள் ஆரம்பமாகும் தினத்தை பின்போடும்படி கல்வி அதிபதியை கேட்டுக் கொள்ளும் தீர்மானம் வடமாகாண கல்லூரி அதிபர்கள் சங்கத்தின் விசேஷ பொதுக் கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேறியது.

இக் கூட்டம் நேற்றுக் காலை, வண்ணை வைத்தீஸ்வர வித்தியாலய மண்டபத்தில், சங்கத் தலைவர் திரு. தெ. து. ஜெயரத்தினம் தலைமையில் நடைபெற்றது.

தலைவர் திரு. ஜெயரத்தினம் பேசும் போது கூறியதாவது:

ஆசிரியர்களை இடமாற்றம் செய்வதற்காக இடமாற்றம் செய்யும் கொள்கையை வடமாகாணக் கல்லூரி அதிபர் சங்கம் பலகாலமாகஎதிர்த்து வந்திருக்கிறது. ஆசிரியர்கள் மாற்றத்துக்குட் பட்டவர்களாயினும் அவர்களை இதர அரசாங்கஉத்தியோகத்தருடன் சமானமாகக் கருதப்படாது என்பது எனது கருத்து.

பல வருடங்கள் ஒரு கல்லூரியில் இருந்து தமது மாணவருக்காக அருந்தொண்டாற்றிய ஓர் ஆசிரியருக்கும், கல்லூரிக்குக் கல்லூரி தாவித் திரியும் ஆசிரியருக்குமுள்ள வித்தியாசத்தை நாம் நன்கறிவோம். இடமாற்றம் வருமென்று தினமும் அச்சம்கொண்டு அல்லது இடமாற்றத்திற்குச் சூழ்ச்சி செய்து கொண்டிருக்கும் ஓர் ஆசிரியர் எந்தக் கல்லூரிக்கும் பயன்படமாட்டார். ஆகையினுல் இடமாற்றங்கள் சட்டப்பிரகாரம் நடைபெறுவதை நாங்கள் விரும்பவில்லை.

இப் பிரச்சினைக்கு ஒரு மார்க்கம் 1961-ம் ஆண்டு தேசியக் கல்விக் கொமிஷன் சிபார்சை ஏற்றுக் கொள்வதே. இதன் பிரகாரம் ஆசிரியர் ஒருவர் எந்த ஊரைச் சேர்ந்தவராயினும் ஒரு குறிப்பிட்ட இடத்தில் ஆகக் குறைந்த காலத்திற்கு வேலை பார்க்க வேண்டும். அத்தவணையின் முடிவை அவர்கள் வேறு இடங்களுக்கு விண்ணப்பம் செய்து போகலாம்.

### அதிருப்தி

தற்சமயம் இடமாற்றங்கள் நடைபெறும் விதங்கள் மிகவும் அதிருப்தி தருவதாக இருக்கிறது.

இந்நாட்டின் [illegible] டத்தில் முக்கியபாகம் வகிக்கும் கல்லூரி அதிபர்கள் ஆசிரிய இடமாற்ற விஷயங்களில்கலந்தாலோசிக்கப்படு

(6-ம் பக்கம் பார்க்க)

## சுப்ரீம்கோர்ட்டுக்கு பாரம்

குரும்பசிட்டி, புதன் மல்லாகம் நீதிபதி திரு. ரி. எஸ். நெத்தசிங்கா, மூளாய் கொலைவழக்கு விசாரணை முடிவடைந்ததைத்தொடர்ந்து எதிரிலய உயர்நீதி மன்ற விசாரணைக்கு நிற்க உத்தரவிட்டு வழக்கை சுப்ரீம் கோர்ட்டிற்கு பாரப்படுத்தியுள்ளார்.

இவ்வருடம் பெப்ரவரி மாதம் 13ந் திகதிமூளாயை சேர்ந்த கிட்டிணன் சிவபாக்கியம் என்ற பெண்மணியை கொலைசெய்யச் சதிசெய்ததாகவும், பெண்ணுக்குகழுத்தில் கத்தியால் வெட்டிக் காயம் விளைவித்ததாகவும் இவரது கணவரான வேலன் கிட்டினன் மீதும், இவற்றிற்குஉடந்தையாக இருந்த நாகமுத்து கந்தசாமி என்ற வாலிபர்மீதும் இவ்வழக்கில் சங்கானைப் பொலிசார் குற்றம் சுமத்தியிருந்தனர்.

எதிரி தரப்பில் வழக்கறிஞர் சிவ ஸ்ரீதரன் ஆஜராகியிருந்தார்,

இவ்வழக்கில் சம்பந்தப்பட்ட முதல் எதிரியான வேலன் கிட்டிணன் யாழ்ப்பாணம் பஸ்நிலையத்தில் வைத்து கொலையுண்டமை குறிப்பிடத்தக்கது.

## சந்தைப்பகுதி கமிஷனர் பாராட்டு

யாழ்ப்பாணம், புதன் 'யாழ். மாவட்ட விவசாயிகளின் மரக்கறிவகைகளுக்கு தென் இலங்கையில நல்ல கிராககியும், மதிப்பும் ஏற்பட்டுள்ளது. இலங்கையின் ஏனைய இடங்களில் இருந்து பெறும் மரககறி வகைகளிலும்பார்க்க யாழ்ப்பாண மரக்கறிகவகைகளின் தரம் உயர்வாகக் காணப்படுவதினுலேயே தென் இலங்கை மக்கள் யாழ்ப்பாண மரக்கறிவகைகளை விரும்பிச் சாப்பிடுகிருர்கள்'

யாழ். மாவட்ட சந்தைப் பகுதியினரால் ஒழுங்குசெய்யப்பட்ட, வடபகுதி மரக்கறிப் பயிர்ச்செய்கையாளர்கள் கூட்டத்தில் கலந்து கொண்ட சந்தைப் பகுதிக் கமிஷனர் திரு. கே பி. திஸநாயக்கா நூற்றுக்கணக்கான மரக்கறிப்பயிர்ச் செய்கையாளர் மத்தியில் பேசுகையில் இவ்வாறு குறிப்பிட்டார்.

இக்கூட்டம் சுன்னாகம் கிராம முன்னேற்றச் சங்கத்தில் நடைபெற்றது.

திரு. கே. பி. திஸநாயக்கா மேலும் கூறியதாவது:

வடபகுதியின் பெரிய கத்தரிக்காய், தக்காளிப்பழம், பீட்றூட், முங்கக்காய், வெங்காயம் ஆகியவற்றை தென் இலங்கை வாசிகள் விரும்பிச்சாப்பிடுகிருர்கள். வடபகுதி விவசாயிகளின் குறைபாடுகளையும் தேவைகளையும்பெற்றுக்கொடுப்பதற்கு சந்தைபகுதி முன்னிற்கும்.

### கோரிக்கைகள்

இக்கூட்டத்தில் மரக்கறிப் பயிர்ச் செய்கையாளர்கள் பின்வரும் கோரிக்கைகளை சந்தைப்பகுதி கமிஷனரிடம் சமர்ப்பித்தனர்.

[6-ம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவாக்கு

நம்மேல் அன்பு இல்லாதவர்கள்மேலும்நாம் அன்பு உள்ளவர்களாகவே இருத்தல் வேண்டும்.

—நாவலர்பெருமான்


# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: EELANADU Jaffna
Post Box: 49 Jaffna
Telephone: 389.

யாழ்ப்பாணம் பிலவங்க வருஷம் மார்கழி மாதம்13ம்திகதி[28-12-67]


## தமிழ்ப் பெண்கள் பொறுப்பு

பம்பாயில் கூடிய அகில இந்திய பெண்கள் மகாநாட்டிலே இந்திய உதவிப்பிரதமர் மொரார்ஜி தேசாய், பெண்கள் தங்களுக்கான உரிமைகளைப் பெற தாங்களே முனைந்து தீவிரமாக வற்புறுத்த வேண்டுமென்று சரியாகச் சொன்னார். அவர் இந்தியப் பெண்களுக்குக் கூறிய இந்த யோசனை இலங்கையிலேசிறப்பாகத் தமிழ்ப் பெண்களுக்குப் பெரிதும் பொருந்தும்.

ஜனநாயக அரசியல் அமைப்பிலே ஆண்களைப் போல் பெண்களும் வாக்குரிமை பெற்றிருக்கிறார்கள். சமூகததில் சரிபாதிப்பேர் பெண்களாவர். ஆகவே பார்லிமெண்ட் சபைமுதல்மாநகரசபை, கிராமசபை வரைஎல்லா மக்கள்பிரதிநிதி ஸ்தாபனங்களிலும் மொத்த எண்ணிக்கையில் பாதிப்பேராவது பெண்களாக இருக்க வேண்டுமென்பது இயற்கை. இந்தியாவிலும், இலங்கையிலும் அப்படி இல்லை. தென்னிலங்கையிலும் பாரதநாட்டிலும் ஒருசில பெண்களாவது பார்லிமெண்ட் சபைகளில் அங்கம் வகிக்கின்றனர். இலங்கையிலே வடக்கு, கிழக்கு பகுதிகளிலிருந்து ஒரு தமிழ்ப் பெண்மணியாவது பார்லிமெண்ட் சபைக்கு தெரிவு செய்யப்படாதது,தமிழ்ப் பெண்குலத்துக்கே அவமதிப்பாகும்.

அதுமட்டுமல்ல,ஜனநாயகம் சரிவர நடைபெறவும், மக்கள் நல்வாழ்வு வாழவும் பார்த்துக் கொள்ள வேண்டிய பொறுப்பு ஆண்களைப் போல் பெண்வாக்காளர்களுக்கும் உண்டு. இப்பொறுப்பை அவர்கள் சரிவர நிறைவேற்றவே அவர்களுக்கும் சரிசமமாக வாக்குரிமை அளிக்கப்பட்டிருக்கிறது. பெண்களிலே சிறப்பாக தமிழ்ப் பெண்களிடையே சிறந்த அறிவாளிகளும், அனுபவஸ்தர்களும், விருப்பு வெறுப்பின்றி பொது நன்மையையே கவனிக்கக் கூடியவர்களும், அரசியல் ஞானமுள்ளவர்களும் இல்லாமலில்லை. அவர்கள் கிராமசபை முதல் பார்லிமெண்ட் வரையில் தேர்தலில் போட்டியிட முன்வராததால், அவர்கள் தங்கள் ஜனநாயகக் கடமையையும் பொறுப்பையும்செய்யத் தவறிவிட்டவர்களாவர். கடமையைச் செய்தாலே உரிமையைப்பெற முடியுமென்பார்மகாத்மா காந்தி அவர்கள். ஆகவே சிறப்பாகத் தமிழ்ப்பெண்கள் தங்கள் உரிமைகளைப் பெற, குறைகள் நீங்க கட்டுப்பாடாகச் சேர்ந்து எல்லாத் தேர்தல்களிலும் ஈடுபட முன்வரவேண்டும். சமூகத்தில் மட்டுமன்றி நாட்டிலும்தமிழ்ப் பெண்களின் மதிப்பும் செல்வாக்கும் உயரவும் அதுவே வழி.

இன்றைய நிலையில், தேர்தல் போட்டிகளில் ஈடுபட்டு வெற்றி பெறுவது பெண்களுக்கு அதிக சங்கடமாகுமென்பது உண்மை. கட்சிகளின் சார்பில் போட்டியிட்டாலும்கூட தங்களால் சமாளிக்கமுடியாதென்று அவர்கள் தயங்கக்கூடும். இது குறித்துநாம் ஏற்கெனவே இப்பத்திகளில் குறிப்பிட்டதுபோல், பெண்களுக்கென சில வருடங்களுக்காவது சில தொகுதிகளை ஒதுக்கி வைப்பதாயின், பல பெண்களும் உள்ளூர் ஆட்சி மன்றங்களிலும், பார்லிமெண்ட் சபையிலும் பங்குபற்ற வாய்ப்பு ஏற்படும். இதனல் பெண்கள் தங்கள் ஜனநாயகப் பொறுப்பை நிறைவேற்றமுடிவதுடன் நாட்டின் பொதுவாழ்வும் மேம்படவும் ஜனநாயகம் வெற்றிபெறவும் முடிவதாக இருக்கும்.

இதற்கு முதற்படியாக தமிழ்ப்பெண்கள் சங்கம் அமைத்து, தங்கள் கருத்தைக் கட்டுப்பாடாக வெளியிடவேண்டும். கேட்டால்தான் கொடுக்கப்படும். 'தட்டுங்கள் திறக்கப்படும்'. தமிழ்ப் பெண்களின் அந்தஸ்து நாட்டில் உயரவும், சீதனம் முதலிய சமூகக் குறைகள் நீங்கவும், வேண்டுமாயின் மற்றவர்களை எதிர்பாராமல் படித்த தமிழ்ப் பெண்கள். பொது உணர்ச்சியுடன் முன்வரவேண்டியது அவசியமும் அவசரமுமாகும்.

---

'ஏன் இந்த அநீதி' என்ற தலைப்புடன் நேற்று எழுதிய தலையங்கத்தில், ஐந்து ஏக்கருக்குக் குறைந்த நிலமுள்ளவர்களும் வெள்ளக்கஷ்ட நிவாரணமாக இலவச விதைநெல் கொடுக்கப்படவேண்டுமென்று வற்புறுத்தி இருந்தோம். அவர்களுக்குத்தான் உதவி அளிக்கப்படுகிறதாம். தவறான ஒரு செய்தியை அடிப்படையாகக் கொண்டு அக் கருத்தை வெளியிட்டதை உடன் திருத்திக்கொள்வதுடன்,புகார்களுக்கு இடமில்லாமல் இந்த உதவியை நேர்மையாகச் செய்யவேண்டுமென்று மீண்டும் அறிவுறுத்த விரும்புகிறோம்.

## நயினாதீவில் திராட்சைசெய்கை

ஊர்காவற்றுறை, புதன் நயினாதீவில் திராட்சைச் செய்கையில் பலர் இப்போது ஊக்கம்காட்டிவருவதாகத் தெரியவருகிறது. சிலர் இச்செய்கையில் நல்ல பலனைப் பெற்றுள்ளதாகவும் தெரிகிறது. இதனைத் தொடர்ந்து விவசாய விஸ்தரிப்புச் சேவையாளர் திரு. பசுபதி இதில் பெரிதும் அக்கறை காட்டும்படி மக்களைக் கேட்டுக் கொண்டிருக்கிறார்.

## ஆதரவு

யாழ்ப்பாணம், வியாழன் மலைநாட்டிலும் கொழும்பிலும் தொழிலாளர்கள் சம்பளஉயர்வு கோரி நடத்திவரும் வேலை நிறுத்தப் போராட்டத்திற்கு தாம் பூரண ஆதரவளிப்பதாக வடஇலங்கை கள் இறக்குந் தொழிலாளர் சங்கம் தெரிவித்துள்ளது.

சென்ற 23-ம் திகதி நடைபெற்ற சங்கத்தின் பொதுச் சபைக் கூட்டத்தில் இவ்வாறு தெரிவிக்கும் தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

# கல்வி அமைச்சருக்கு கிளிநொச்சி எம். பி. கடிதம்

கிளிநொச்சி, புதன் ஆசிரியர் கலாசாலையிலிருந்து பயிற்சி முடிந்து வெளியேறிய விவாகமாகாத பெண் ஆசிரியர்களை வெளி இடங்களுக்கு நியமிப்பதையிட்டு கிளிநொச்சி எம். பி. திரு. கா. பொ. இரத்தினம் கல்வி அமைச்சருக்கு ஆட்சேபம் தெரிவித்துள்ளார். இதுசம்பந்தமாக அவர் எழுதிய கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

1965-ம் ஆண்டு ஆசிரியர் இடமாற்றத்திட்டத்தில் 35 வயதிற்குட்பட்ட விவாகமாகாத பெண் ஆசிரியர்களை வெளியிடங்களுக்கு மாற்றுவதில்லையென எங்கள் கட்சிக்கு உறுதி அளிக்கப்பட்டது. ஆனல் இப்பொழுது இந்த நிபந்தனை மீறி மாற்றங்கள் செய்யப்பட்டது கண்டிக்கப்படத்தக்கது. ஆகையால் இத்தகைய இடமாற்றங்களை உடன் நிறுத்தி வைக்கவும்.

## சேமலாபநிதியும் சுருட்டுத் தொழிலாளரும்

யாழ்ப்பாணம்,. வியாழன் சேமலாபநிதி சுருட்டுத் தொழிலாளருக்கு பிற்காலத்தில் ஒரு நன்மையைக் கொடுக்கக் கூடியது. சேமலாபநிதித் திட்டத்தை இலங்கையிலுள்ள 400 சுருட்டுத் தொழிற்சாலையிலும் 59-ம் ஆண்டு அமுல்நடத்தியிருந்தால் இன்று சுருட்டுத் தொழிலாளரின் நிலை முன்னேற்றமடைந்திருக்கும்.

இணுவில் பரராசசேகரப் பிள்ளையார் கோவில் முன்றலில் நேற்று நடந்த இலங்கை சுருட்டுத் தொழிலாளர் சங்கக் கூட்டத்திற்கு தலைமைவகித்துப் பேசுகையில் திரு. சி. அருளம்பலம் மேற்கண்டவாறு கூறினார்.

திரு. சி. முதலியார் பேசுகையில் கூறியதாவது:-

சேமலாபநிதித் திட்டம் 59-ம் ஆண்டு அமுலுக்கு வந்தபோதும் இன்று நான்கு சுருட்டுத் தொழிற்சாலையில் மாத்திரம் கட்டப்பட்டு வருகிறது. சில சுருட்டு முதலாளிமார் முதலாளியின் 6 வீதத்தையும் தொழிலாளியின் 4 வீதத்தையும் தொழிலாளியின் கூலியில் கழித்து அரசாங்கத்திடம் கட்டாமல் அப்பணத்தில் தொழிலைப் பெருக்கி வருகிறார்கள்.

## இன்றைய பலன்

[28-12-67]
வியாழக்கிழமை
மார்கழி-மீ 13 உ

நட்சத்திரம்- விசாகம் பகல் 10-29 மேல் அனுஷம்.

திதி- துவாதசி பி. ப. 3-52 மேல் திரயோதசி.

சுபநேரம்- 7-58— 9-28.

ராகுகாலம்- 1-58— 3-28.

மேஷம்- பகைவர் தடுப்பர், பார்த்துநட.

ரிஷபம்- அறுசுவை உண்டி, ஆனந்தவாழ்வு.

மிதுனம்- முதியோர் ஆசி, முடிவில் வெற்றி.

கடகம்- பந்தபாசம், பரவச நிகழ்ச்சி.

சிங்கம்- முயற்சி வெல்லும், முதலிடமுண்டு.

கன்னி- இல்லறமஇனிக்கும், விருந்தும் உண்டு.

துலாம்- காரியத்தடைகவலைக்கும் இடம்.

விருச்சிகம்- ஆழ்ந்த சிந்தை, துயரின் ரேகை.

தனுசு-கன்னியர் உறவு, பின்னிடும் காதல்.

மகரம்- பிணிக்கு இடங் கொடேல், பிறவூண் தவிர்.

கும்பம்- பெற்றோர் நலன், பெருமையுமுண்டு.

மீனம்- மக்கள் முன்னேற்றம்,மதிப்பும் உயரும்.

[illegible]
திருமலை [illegible]

## 8-ம் வகுப்பு பரீட்சை முடிவுகள்

யாழ்ப்பாணம். வியாழன் "வட மாகாண ஆசிரியர் சங்கம் நவம்பர் மாதத்தில் நடத்திய 8-ம் வகுப்புப் பரீட்சையின் முடிவுகள் வருமாறு: தோற்றியவர் 3132. சித்தியடைந்தவர் 1865. சித்தியடைந்தவர்களில் முதலாம் பிரிவினர் 187. இரண்டாம் பிரிவினர் 781, மூன்றும் பிரிவினர் 897.

இப்பரீட்சைக்கு யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, திருகோணமலை, மன்னார், வவுனியா, முல்லைத்தீவு முதலிய இடங்கள் உட்படத் தமிழ்ப்பகுதி மாணவர்கள் எல்லோரும் தோற்றினர்.

(5-ம் கலத்தொடர்ச்சி)

டன், இன்னும் அவருக்குப் பல சிறப்புகள் காத்துள்ளதாகக் கூறின் அது தவறுகாது.

'தமிழோசை உலகமெல்லாம் செழிக்கச்செய்வீர்' என்று பாரதியார் கூறியபடி, லண்டனிலே பி. பி. ஸி.யில் முதல் முதலாக 'தமிழோசை' எழுப்பி உலகெல்லாம் பரப்பினர். அவர் எழுதிய இரு நூல்களுக்கும் இரு நாட்டு அரசாங்கங்களும் பரிசுகள் வழங்கின. அவர் புதிதாக ஒரு நூல் எழுதப்போவதாக அறிந்தேன். அதற்கும் பரிசு நிச்சயம் என்று இப்போதே கூறிவிடலாம்!

அவர் தமது புதிய பதவியை, இரு தேச நல்லுறவும் பலப்படப் பெரிதும் பயன் படுத்துவாரென்றும், சிறப்பாக ஈழத்துத் தமிழ் எழுத்தாளருக்கும் அவர்களது நூல்களுக்கும் தமிழகத்திலே புதிய மதிப்பும் கிராக்கியும் ஏற்படவும் தம்மாலானதையெல்லாம் செய்வாரென்றே நம்புவோம். அவரும் அவரது இலக்கிய கலைத்தொண்டும் நீடூழி வாழ்க!

ஃ ஃ ஃ

வேண்டத்தக்க தறிவோய் நீ வேண்ட முழுதும் தருவோய் நீ, வேண்டும் அயன் மாற்கரியோய் நீ வேண்டி என்னைப் பணிகொண்டாய், வேண்டி நீ யாதருள் செய்தாய் யானும்அதுவே வேண்டின் அல்லால், வேண்டும் பரிசொன்றுண்டென்னில் அதுவும் உன்தன் விருப்பன்றே.

—மாணிக்கவாசக சுவாமிகள்

[யான் விரும்பத்தக்கனவற்றை அறிபவன் நீயே. அவற்றை உன்பாலிருந்து கேட்ச முழுவதையும் தருபவனும் நீயே. உன்னைக் காண விரும்பிய அரி பிரம்மர்களுக்கும் காணுதற்கரியவனானவனும் நீயே, ஆனல என்னை விரும்பி வந்தாட்கொண்டாய், நீ எதனை விரும்பி அருள் செய்தாயோ யானும் அதனையே விரும்புவதல்லாமல் இன்னும் யான் விரும்பக்கூடியது யாதாகிலும் இருக்குமாயின் அதுவும் உன்னுடைய விருப்பத்தின்படி நடக்கிறதல்லவா?]

# ஐயசரன் எழுதுவது

சென்னையிலே தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் புதிய தலைவராக நமது சிவபாதசுந்தரம் தெரிவு செய்யப்பட்ட செய்தியைக் கேட்டதும் எனக்கு மகிழ்ச்சியும் பெருமையும் தாங்கவில்லை. என் தலையிலே ஏதோ ஓர் உயர்ந்த கிரீடம் வைத்தது போல உணர்கின்றேன்! ஓர் ஈழத் தமிழருக்கு, தமிழக எழுத்தாளர் இந்த கௌரவமளித்துள்ளதை அறிய இங்குள்ள எந்தத் தமிழர்தான் மகிழ்ச்சியும் பெருமையும் அடையமாட்டார்கள்?

அதிலும் உலகத் தமிழ்த் திருவிழா சென்னையில் நடக்க இருக்கும் இச்சமயத்தில், தமிழகத்திலே எழுத்தாளர் சங்கத் தலைமைப் பதவி கிடைத்துள்ளது சாதாரணமல்ல. சென்னையிலே தமிழ் எழுத்தாளர் சங்கத் தலைமைப் பதவிக்கு எவ்வளவோ போட்டிகளுண்டு. ஆனல் அன்பர் சுந்தரம் எவ்வித போட்டியுமில்லாமல் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளது மிக விசேஷம் தமிழக எழுத்தாளரின் நம்பிக்கையையும் மதிப்பையும் இப்படி அமோகமாக அவர் பெற முடிந்ததெனில் அங்கு குடியேறிய சில வருடங்களுக்குள்ளாக, அவர் எவ்வளவு நல்ல முறையில் அங்கு நடந்திருக்க வேண்டுமென்பது சொல்லாமலே விளங்கும். இது குறித்து ஈழமே பெருமை கொள்ள நியாயமுண்டு. ஒரு சிங்களவருக்கு வெளிநாட்டிலே இவ்வித கௌரவம்கிடைத்திருப்பின் தென்னிலங்கைப் பத்திரிகைகள் எவ்வளவு அமர்க்களப் படுத்தும்!

ஃ ஃ ஃ

ஈழத் தமிழர் தமிழகத்தில் சிறப்புப் பெறுவது இது முதல் தடவையல்ல. நல்லைநகர் நாவலர் பெருமான் தமிழகம் சென்று சைவத்துக்கும் தமிழுக்கும் ஆற்றிய பணியை இன்றும்கூட தமிழகப் பெரியோர்கள் நன்றியுடன் நினைவுகூர்ந்து வணக்கம் தெரிவிக்கின்றனர்.

மற்றும் ஈழத்துப் புதல்வர்கள் பலர் தமிழகத்தில் மட்டுமன்றி பாரத நாட்டிலே பெரும் பெரும் பொறுப்புகள் வகித்து, ஈழத்தின் மதிப்பை உயர்த்தி இருக்கிறார்கள்.

இங்கிருந்து மக்கள் பாரதத்துக்கு முன்போல் தாராளமாகப் போய் வரவும், குடியேறவும் அங்கு பணிசெய்யவும் முடியுமாயின், இன்றும் ஈழத்தவரில் பலர் அங்கு சிறப்புடன் மேலான தொண்டாற்றமுடியும். சுதந்திரம் வந்தபின், போக்குவரத்துக்கும், பணிசெய்வதற்கும் சந்தர்ப்பமே மறுக்கப்பட்டுவிட்டது. இது பெரிய துரதிர்ஷ்டம். இவ்வளவு சங்கடங்கள் இருந்தும்நமது சுந்தரம் தமிழகம் சென்று குடியேறி, நல்ல தொண்டாற்றி, இப்புதிய பதவியைப் பெற முடிந்துள்ளது பெரிய காரியம்..

ஃ ஃ ஃ

இந்தியாவுக்கு அவர் புறப்பட்டுச் செல்லுகையில், கொழும்பிலே ஒரு பிரியாவிடைக் கூட்டம் நடந்தது. சில நண்பர்கள் கண்ணீரும் வடித்தனர். அவருக்கு இலங்கை மிகச் சிறிய இடம் என்றும், பெரிய நாடான இந்தியாவில் மேலான தொண்டாற்றவே அவர் செல்வதாயும் அவரது பேரும் புகழும் பன்மடங்கு உயரப்போவதாயும் அப்போது கூறியதாக நினைப்பு. அது உண்மையாகிவருவது

(4-ம் கலம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வியட்னும் போருக்குத்தீர்வு காண

## ஹனேயுடன் நேரடிப் பேச்சு தென் வியட்னுமின் விருப்பம் என அதன் வெளியுறவு மந்திரி கூறுகிறார்

சைகோன், டிசெ. 27

வியட்னும் போரை ஒரு முடிவுக்குக் கொண்டுவர, ஹனேயுடன் நேரடிப் பேச்சு வார்த்தைகளில் ஈடுபடத் தென் வியட்னும் விரும்புவதாகத் தென் வியட்னும் வெளியுறவு மந்திரி டாக்டர் டிரான் வான்டோ அறிவித்துள்ளார். ஐவரி கோஸ்டுக்குப் புறப்பட்டுச் செல்ல முன்னர், இங்கு பத்திரிகை மாநாடொன்றில் பேசுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

ஹனேயுடன் நேரடிப் பேச்சுவார்த்தைகள் நடத்தும் தென் வியட்னுமின் விருப்பமடங்கிய செய்தி ஒன்று ஏற்கனவே வட வியட்னும் ஜனதிபதி திரு. ஹோ சி மின்னுக்கு அனுப்பப் பட்டிருக்கலாமென்றும் தென் வியட்னும் வெளியுறவு மந்திரி கூறினர்.

வியட்னும் பிரச்னே, வியட்னும் மக்களாலேயே தீர்க்கப்படவேண்டிய தொன்று என்பதே தென் வியட்னுமின் கொள்கையாகும் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

ஹனேய் ஆட்சியை வீழ்த்தும் நோக்கமோ அல்லது வட வியட்னும் மீது படையெடுக்கும் எண்ணமோ தென் வியட்னுமுக்குக்கிடையாது எனத் தென் வியட்னும் வெளியுறவு மந்திரி தெரிவித்தார்.

ஆனல், தென் வியட்னுமில் இயங்கும் வட வியட்னுமின் அரசியற் கிளையான 'வியட்கொங்' என அழைக்கப்படும் தேசிய விடுதலை முன்னணியைத் தமது அரசாங்கம் அங்கீகரிக்காது என்று தென் வியட்னும் வெளியுறவு மந்திரி வலியுறுத்தினர்.

### 80,000 பேர் கொல்லப்பட்டனர்

இதற்கிடையில், தென் வியட்னுமிலுள்ள அமெரிக்கத் துருப்புகளுக்குத் தலைமை தாங்கும் ஜெனரல் வெஸ்ட் மோர்லாண்ட், இவ்வருடத்தில், வியட்கொங்கியரும், வட வியட்னுமிய துருப்பினருமாக மொத்தம் 80,000 பேர் வரை கொல்லப்பட்டிருப்பதாக அறிவித்துள்ளார்.

## நாட்டின் பொதுவாழ்வில் பெண்களின் பங்கு

### தேசாய் வலியுறுத்தல்

பம்பாய், டிசெ. 27

நாட்டின் பொது வாழ்வில் அதிக அளவில் பங்குபற்றுமாறு இந்தியத் துணைப் பிரதமர் திரு. மொரார்ஜி தேசாய், இந்தியப் பெண்களைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

பம்பாயில் நடைபெற்ற அகில இந்திய மகளிர் மாநாட்டில் பங்குபற்றிப் பேசுகையில், அவர் இவ்வாறு கோரினர்.

பொது வாழ்வில் பெண்கள் தமது நிலையை நிலைநாட்ட முன்வரவேண்டுமென்று கேட்டுக் கொண்ட துணைப் பிரதமர், நாட்டின் ஜனத்தொகையில் சரிபாதியாகவுள்ள பெண்களுக்குப் பார்லிமெண்டிலும், பொது வாழ்விலும், ஆண்களுக்குச் சமமான பிரதிநிதித்துவம் ஏன் இருக்கக் கூடாது என்று வினவினர்.

## மொழிப்பிரச்னைக்கு ஒரு மாநாட்டை விநேபாஜி அழைக்க வேண்டும்

### ஜெயப்பிரகாஷ் நாராயண் விருப்பம்

சென்னை, டிசெ. 27

இந்தியாவின் மொழிப்பிரச்னையைத் தீர்க்க, ஆச்சார்ய விநேபா பாவே ஒரு மாநாட்டை அழைக்கவேண்டுமெனச் சர்வோதயத் தலைவர் டாக்டர் ஜெயப்பிரகாஷ் நாராயண் ஆலோசனை கூறியுள்ளார்.

சர்ச்சைக்குரிய மனிதரல்லாதவர் என்ற முறையில் ஆச்சார்ய விநேபாபாவே, இத்தகைய மொழி மாநாடொன்றை அழைப்பதற்கு முற்றிலும் தகுதி வாய்ந்தவர் என்று ஜெயப்பிரகாஷ் நாராயண் மேலும் குறிப்பிட்டார்.

திரு. இராஜகோபாலாச்சாரியாருக்கு, அவரது 90வது பிறந்த தினத்தையொட்டி நடைபெற்ற பாராட்டு விழாவொன்றில் கலந்து கொண்டு பேசுகையிலேயே திரு. நாராயண் மேற்கண்டவாறு கூறினர்.

### பிரிவினை ஆபத்து

மொழிப்பிரச்னையை வீதிகளில் தீர்த்துக்கொள்ளமுடியாது என்று திரு நாராயண் கூறினர். நாட்டில் அதிகமாகத் தோன்றியுள்ள பொறுமையின்மையை அவர் கண்டித்தார். துண்டுதுண்டாகப் பிரியும் அபாயம், முன்னெப்போதும் விட இப்போதே நாட்டை எதிர் நோக்கியுள்ளதாக அவர் எச்சரித்தார்.

### அண்ணா பேச்சு

இந்த விழாவில் கலந்து கொண்ட தமிழக முதல் மந்திரி திரு. அண்ணாதுரை, எல்லா மக்களுடைய திருப்திக்கும் ஏற்றவகையில் மொழிப் பிரச்னைக்கு ஒரு தீர்வு ஏற்படாவிட்டால் நாட்டின் ஐக்கியத்துக்கு ஆபத்து ஏற்படலாம் என்று கூறினர்.

## மீண்டும் மொழிக்கிளர்ச்சிகள்

இதற்கிடையில் மொழி சம்பந்தமான ஆர்ப்பாட்டங்கள், நாட்டின் பல பகுதிகளிலும் மீண்டும் தலைதூக்கியுள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

ஒரு வார ஓய்வுக்குப்பின்னர், உத்தரபிரதேசத்தில் மீண்டும் பலாத்காரச்சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. ஓரிடத்தில் ஒரு பிரயாணிகள் ரயிலை நிறுத்தி, இரண்டு பெட்டிகளுக்கு வன்முறை ஆர்ப்பாட்டக்காரர்கள் தீ வைத்துக் கொளுத்தினர். இந்த இடத்தில், சுமார் 15,000 மாணவர்களடங்கிய ஒரு கூட்டம் கூடிநின்றதாகத் தெரிவிக்கப்பட்டது.

ஆங்கிலநீடிப்புக்கு எதிர்ப்புத்தெரிவித்த இம்மாணவர்கள், முன்னதாக ஒரு ரயில்வே ஸ்டேஷனுக்குச் சென்று, அங்கு கடமையாற்றிய உத்தியோகத்தர்களையும் தாக்கினர். இத்தாக்குதலில் இரண்டு உத்தியோகத்தர்கள் காயமுற்றனர்.

### ஆந்திராவில்

தென்னிந்தியாவில், ஆந்திரப் பிரதேசத்திலிருந்தும், வன்முறைச் சம்பவங்கள் பற்றிய செய்திகள் கிடைத்துள்ளன. அங்கு ஆர்ப்பாட்டக்காரர் ஒரு பஸ்ஸுக்கு தீ வைத்தனர். சுமார் இரண்டு மணிநேரம் பஸ்கள் எதுவும் தெருக்களில் ஓடவில்லை. கடைகளும், பள்ளிக்கூடங்களும் மூடப்பட்டிருந்தன.

## லாவோஸில் ஆபத்தான இராணுவ நிலைமை

### பாதுகாப்பு மந்திரி தகவல்

வியன்ஷியென், டிசெ. 27

லாவோஸின் இராணுவ நிலைமை, கடுமையான ஆபத்தை எதிர்நோக்கியுள்ளதாக பாதுகாப்பு மந்திரி அறிவித்திருக்கிறார். லாவோஸில் பல நகர்கள் மீதும், வட வியட்னுமிய துருப்புகள் தாக்குதல்கள் நடத்திவந்திருப்பதாக அவர் கூறினர். பலமுனைகளிலும் இத் தாக்குதல்கள் நடைபெற்றுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

லாவோஸில் இயங்கும் கம்யூனிஸ்ட் துருப்புகளான 'பதெட்லாவோ' துருப்புகள் ஒரு பட்டினத்தை அண்மையில் கைப்பற்றியதாகவும், ஆனல் லாவோஸ் துருப்புகள் அதை மீண்டும் பிடித்துவிட்டதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## மேற்கு ஆசிய பிரச்னையில் இஸ்ரேலின் பிடிவாதம்

### டெல் அவிவில் ஜாரிங்

டெல்அவிவ், டிசெ. 27

மேற்கு ஆசியாவில் ஐ.நா. விசேஷ பிரதிநிதியான டாக்டர் ஜாரிங், நேற்று இஸ்ரேல் வந்து சேர்ந்தார். அவர் இஸ்ரேலுக்கு விஜயம் செய்வது, 11 நாட்களில் இது இரண்டாவது தடவையாகும். இடையிலே, அவர் கெயிரோவுக்கும், மற்றும் அரபு நாடுகளின் தலைநகர்களுக்கும் சென்றிருந்தார்.

டாக்டர் ஜாரிங், இரண்டாவது தடவையாக இப்போது இஸ்ரேல் வந்திருப்பது ஜெருசலத்தைத் தன்னிடமே வைத்துக்கொள்வது, அரபுநாடுகளுடன் நேரடிப் பேச்சுவார்த்தைகள், சினய் பாலைவனப் பிராந்தியத்தை இராணுவ விலக்குப்பிராந்தியமாகப் பிரகடனப்படுத்துவது ஆகிய கொள்கையிலிருந்து இஸ்ரேல் இம்மியளவாவது விட்டுக்கொடுக்கத் தயாராகவில்லை என்பதையே வலியுறுத்துவதாகப் பார்வையாளர்கள் இங்கு அறிவிக்கின்றனா.

### அரபுக் கருத்து

நேரடிப்பேச்சுவார்த்தைகள் பற்றி இஸ்ரேல் வலியுறுத்திவருவது மேற்கு ஆசியா சம்பந்தமாக ஐ நா பந்தோபஸ்து சபை நிறைவேற்றிய தீர்மானத்தை நிராகரிப்பதாகும் என அரபு வட்டாரங்கள் கருத்துத் தெரிவித்துள்ளன.

### அமெரிக்க விமானங்கள்

இதற்கிடையில், இஸ்ரேலுக்கு 'ஸீஹோக்' இரக விமானங்களை அனுப்ப அமெரிக்கா முடிவுசெய்துள்ளது இஸ்ரேலுககு அமெரிக்கா நேரடி ஊக்கமளிப்பதாகும் எனவும் அரபுவட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

மேற்கு ஆசியப் பகுதியில் அமைதி நிலவுவதற்கு அமெரிக்கா ஒரு தடையாக இருப்பதாக அரபுநாடுகள் உணர்ந்துவருவதாகவும் கூறப்படுகிறது.

## இயந்திரம் மூலம் சோதிடம்

பாரிஸ், டிச. 27

'கொம்பியூட்டர்' இயந்திரம் மூலமாகச்சோதிடம் கூறப்படுகிறது. இது பாரிஸ்நகரில்நடைபெறுகிறது. அங்கு, இந்த இயந்திர முறைச் சோதிடம் மிகுந்த ஆதரவைப் பெற்று வருகிறது.

ஒரு துண்டில், நீங்கள் பிறந்த திகதி, வருடம், நேரம், இடம் இவற்றைக் குறித்து, இயந்திரத்தில் போடவேண்டியதுதான். ஒரு நிமிடத்தில் உங்களைப்பற்றிய பூரணமான சோதிடக் குறிப்பை, இயந்திரம் தந்துவிடுகிறது.

## 'லால் பகதூர் நகர்'

மைசூர். டிச. 27

அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியின் 71-வது வருடாந்தக் கூட்டத் தொடர் நடைபெறவிருக்கும் அரங்குக்கு 'லால்பகதூர் நகர்' எனப் பெயரிடுவதெனக் கூட்டத்தொடரின் வரவேற்புக் கமிட்டி முடிவுசெய்துள்ளது.

வரவேற்புக் கமிட்டியின் கூட்டம், மைசூர் காங்கிரஸ் கட்சிப் பிரதேச கிளையின் தலைவரான திரு. வெங்கட்ராமன் தலைமையில் நடைபெற்றது.

## இந்திய வானெலியில் ரஷ்ய சேவை

புதுடில்லி, டிச. 27

அகில இந்திய வானெலியின் ரஷ்ய மொழி நிகழ்ச்சிகள், அடுத்த வருட முற்பகுதியில் ஆரம்பிக்கவிருக்கின்றன. இதற்கான இறுதி திட்டங்களை, இந்திய தகவல் ஒலிபரப்பு அமைச்சு தயாரித்துவருகிறது.

## பிரியாவிடை உபசாரம்

அளவெட்டி, புகன்

அளவெட்டி தபால் நிலைய உதவி அதிபராகச் சேவையாற்றி, வெள்ளவத்தைக்கு மாறிச் செல்லும் திரு. எஸ். ஐ. இராமகிருஷ்ணனுக்கு ஒரு பிரிவுபசார விருந்து அளிக்கப்பட்டது. தபால் நிலைய முன்றிலில் நடைபெற்ற இவ்வைபவம் அளவெட்டிப் பொதுமக்களால் நடாத்தப்பெற்றது. அன்னாரின் சேவைநலன் பற்றிப் பலர் பேசினர். பரிசில்களும் வாழ்த்துப்பாவும் வழங்கப்பட்டன.

## அபராதம்

ஊர்காவற்றுறை, புதன்

கள்ளக்கடத்தலில் ஈடுபட்டதாக 11 மீனவர்களுக்கு வடபகுதி சுங்க இலாகா அதிபர் தலா 2500 ரூபா அபராதம் விதித்துள்ளார்.

ஊர்காவற்றுறை சுங்கப் பகுதியினரால் கைதுசெய்யப்பட்ட இவர்களின்கடத்தல் பொருள்களும் படகும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புதிய உடையார்

புத்தூர், புதன்

புத்தூர் முன்னாள் கிராமாதிகாரியும், சமாதானநீதவானுமாகிய திரு. சின்னத்தம்பி சங்கரப்பிள்ளை அச்சுவேலிப்பகுதிக்கு 1-1-1968 முதல் உடையாராக நியமனம்பெற்றுள்ளார் இவர்புத்தூர்—ஆவரங்கால் பயிர்ச்செய்கைக் குழுக்களின் சங்கத்தின் தலைவராகவும், வலிகாமம் கிழக்குப்பகுதி பயிர்செய்கைக் குழுக்களின் சமாசத்தின் தலைவராகவும் தொண்டாற்றி வருகின்றார்.

## ஐஸ்கிறீமும் விலை உயர்வு

யாழ்ப்பாணம், வியா.

பாலுணவுகளுக்கு ஏற்பட்ட தட்டுப்பாட்டினாலும் நாணய மதிப்புக் குறைப்பாலும் யாழ்ப்பாணத்தில் ஐஸ்கிறீம்விலை அதிகரித்துள்ளது.

ஜனவரி முதலாம் திகதி முதல் ஐஸ்பழத்தின் விலை 10 சதமாகவும், ஐஸ்கிறீமின் விலை 35 சதமாகவும், லொலி பொப்ஸ், ஐஸ் ஜொலி, ஐஸ் சொக் ஆகியவை 20 சதமாகவும் அதிகரிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கடையில் திருட்டு

யாழ்ப்பாணம், வியா.

யாழ்ப்பாணம் மணிக்கூட்டு வீதியிலுள்ள ஒரு கடையில் சுமார் 1750 ரூபா பெறுமதியான பலவகையான சாமான்கள் திருட்டு போய்விட்டது. இதுசம்பந்தமாக இதுவரை எவரும் கைதுசெய்யப்படவில்லை.

இதுசம்பந்தமாக உதவி பொலிஸ் சுப்பிரிண்டன் திரு. ஆர். சி. தவராசா, இன்ஸ்பெக்டர் திரு. டி. மெண்டிஸ்ஆகியோர் புலன் விசாரணைநடத்தி வருகின்றனர்.

## வடிகால் திட்டம்

அளவெட்டி, புதன்

சமீப காலத்தில் ஏற்பட்ட வெள்ளத் தொல்லைகளைப் போல மீண்டும் ஏற்படாமல் தடுக்க ஒரு வடிகால் திட்டத்தை காங்கேசன் துறைப் பகுதியில் ஏற்படுத்த முயற்சிகள் செய்யப்படுகின்றன.

இதுசம்பந்தமாக காங்கேசன்துறை எம். பி. செல்வநாயகம், உடுவில் எம். பி. திரு. வி. தர்மலிங்கம், பிரதம நீர்ப்பாசன பொறியியலாள நிபுணர் ஆகியோர் இப்பகுதிகளைப் பார்வையிட்டனர்.

## 6 எதிரிகளும் விடுதலை

குரும்பசிட்டி, புதன்

சங்கானைக் கலவர வழக்கொன்றில் ஆறு பேர் மீது குற்றம் சுமத்தித் தொடரப்பட்டிருந்த வழக்கு விசாரணையின் பின்னர் மல்லாகம் நீதிபதி திரு. ரி. எஸ். நெத்சிங்கா ஆறு எதிரிகளையும் விடுதலைசெய்து தீர்ப்பளித்துள்ளார்.

இவ்வருடம் ஆகஸ்ட் மாதம் 7-ம் திகதி சட்ட விரோதகூட்டம் கூடி, உயிருக்கு அபாயம் விளைவிக்கக் கூடிய பயங்கரஆயுதங்கள் வைத்திருந்ததாகவும் கந்தன் நல்லப்பு என்பவரை துப்பாக்கியால் சுட்டுக் கொலைசெய்ய எத்தனித்ததாக எல்லாமாக நான்கு குற்றச்சாட்டுகளின் பேரில் சங்கானை நிச்காமத்தைச் சேர்ந்த செல்வரத்தினம், திருநாவுக்கரசு, பொன்னுத்துரை, நடேசு, இராமு, வேலாயுதம் ஆகிய ஆறு பேருக்குஎதிராக சங்கானைப் பொலிஸார் இந்த வழக்கினைத் தொடர்ந்திருந்தனர்

எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு. ஆர். ஜே. செல்வரத்தினம் ஆஜராகிருயிந்தார்.

## இடமாற்றங்கள்

காங்கேசன்துறை, புதன்

யூனியன் கல்லூரி ஆசிரியர்கள் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர். இவர்களில் அநேகர் கலைப்பிரிவுப் பட்டதாரிகள் என்பதுகுறிப்பிடத்தக்கது.

திரு. கே. சோமசுந்தரம் இங்கிருந்து பதவி உயர்வு பெற்று பதில் அதிபராக யாழ்ப்பாணம் நாவலர் மகா வித்தியாலயத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

திரு. வி. சிவசுப்பிரமணியம் இங்கிருந்து கொட்டாறுமுலை மகாவித்தியாலயத்திற்கும், திரு. செல்லையா இங்கிருந்து மாத்தளை சென். தோமஸுக்கும், திருமதி செல்லையா பாக்கிய வித்தியாலயத்திற்கும், திரு. வி. பொன்னுச்சாமி இங்கிருந்து நுவரேலியாவிற்கும், திரு. ஆர். அம்பிகைபாகன் இங்கிருந்து ஒட்டமாவடி மகா வித்தியாலயத்திற்கும், திருமதி ஏ. கனகரத்தினம் இங்கிருந்து மன்னாருக்கும் திருமதி எம். ஜே. ஜே. எட்வேட் காரைநகர் இந்துக் கல்லூரிக்கும், பண்டிதர் செ. நடராசா இங்கிருந்து கண்டிக்கும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

இலிகிதராகக் கடமையாற்றிய திரு. வி. சபாரத்தினம் இங்கிருந்து மானிப்பாய் இந்துமகளிர் கல்லூரிக்கும், இவரது இடத்திற்கு திரு. எஸ். ஜே. மனோகரனும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

ஃ ஃ

சங்கானை, புதன்

சாங்கானை அரசினர் ஆஸ்பத்திரியில் கடமையாற்றி வந்த அப்போதிக்கரி திரு. எஸ். பாலசிங்கம் ஜனவரி மாதம் தொடக்கம் பதுளை ஆஸ்பத்திரிக்கு மாற்றலாகியுள்ளார்.

ஃ ஃ

அச்சுவேலி, புதன்

அச்சுவேலி கிறீஸ்தவ கல்லூரியில் உதவி அதிபராகக் கடமையாற்றிய திரு. எஸ் எஸ் துரைசிங்கம் தம்பலகாமத்துக்குஇடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

ஃ ஃ ஃ

புலோலி, புதன்

இலங்கைவங்கியின் பருத்தித்துறைக்கிளையில் குமாஸ்தாவாகக் கடமையாற்றிய திரு. எம். டி. காசிப்பிள்ளை நுவரெலியாக்கிளைவங்கிக்கு அடுத்தமாதம் 1-ம்திகதி தொடக்கம் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். உதவிக்கணக்காளர் திரு. ரி. கே. மேதர் இலங்கை வங்கியின் கொழும்பிலுள தலைமைக் காரியாலயத்துக்கு மாற்றம் பெற்றுள்ளார்.

ஃ ஃ

அநுராதபுரம், புதன்

அநுராத சமூக சேவை இலாகாவில் பிரதம லிகிதராகக் கடமையாற்றிய திரு. எஸ். விஜயசித்தம்பி கொழும்புக் கச்சேரிக்கு பிரதம லிகிதராக மாற்றலாகியுள்ளார்.

கோப்பாய், புதன்

கோப்பாய் தபாற்கந்தோரில் தற்போது இடைக்கால தபால் அதிபராகக்கடமையாற்றும் திரு. அரியநாயகம் அநுராதபுரம் தபால் கந்தோருக்குப் பதவியுயர்வுடன் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். இந்நிலைய அதிபராக பண்டத்தரிப்பைச் சேர்ந்த திரு. ரி. எஸ். நடராசா ஜனவரி மாதம் முதலாம் திகதி முதல் நியமனம் பெற்றுள்ளார்.

## பாடசாலை இடமாற்றம்

ஊர்காவற்றுறை, புதன்

புங்குடுதீவு பராசக்தி வித்தியாசாலை அடுத்த மாதம் தொடக்கம்சங்கத்தாகேணியில் புதிதாய் அமைக்கப்பட்ட கட்டிடத்திற்கு இடமாற்றம்செய்யப்படவிருக்கிறது.


50 சதத்துடன் விரைவில் செல்வந்தராகுங்கள்

ஒவ்வொரு வாரமும், நூற்றுக்கு மேற்பட்டவர்கள் விரைவில் செல்வந்தராகி விடுகின்றனர்.



அடுத்து உங்கள் முறை ஆகலாம்

50 சதத்திற்கு நீங்கள் புத்தம் புதிய கார் ஒன்றையும் பெருந் தொகைக்கான காசோலையையும் பெறலாம்.

அதிர்ஷ்டத்தை எதிர்பார்த்து இராதீர் உங்கள் தேசிய லொத்தர் சுவீப் டிக்கெட்டுகளை இன்றே வாங்குங்கள்.




உங்களுடைய அடுத்த பெரிய சுவீப்புகளில்

முதற்பரிசு அதிர்ஷ்டசாலிகள் தாம் பெறும் ரொக்கப்பணத்திலிருந்து ஒரு பகுதியைக் கொண்டு அவர்கள் தமது விருப்பப்படி பின்வரும் கார்களைப் பெறுவதற்கு வாய்ப்பு இருக்கும்.

11—1—68-ல் நடைபெறும் 176-வது சீட்டிழுப்பு

ரூபா 17,300-க்கு புத்தம்புதிய வொல்ஸ் வாகன் 1600 ஸ்டேசன்வாகன்



சீட்டிழுப்பு 176

18—1—68-ல் நடைபெறும் 177-வது சீட்டிழுப்பு

ரூபா 10,755.61-க்கு புத்தம்புதிய டற்சன் புளூபேர்ட் கார்



சீட்டிழுப்பு 177

இவைகள் தீர்வை உட்பட வழமையான கம்பெனி பட்டியல் விலைகள்

இந்தக் கார்கள் பெறுவதற்கான சந்தர்ப்பம் சீட்டிழுப்புக்குப் பின்னர் 14 நாட்களுக்கு மட்டுமே வழங்கப்படும்.

ஞாபகத்திலிருக்கட்டும்:-

நீங்கள் வாங்கும் ஒவ்வொரு தேசிய லொத்தர் சுவீப் டிக்கெட்டும், அதிர்ஷ்டத்தின் வாயிலுக்கு உங்களை அழைத்துச் செல்கிறது.

50 சதம் முதலீடு செய்து பெரும் செல்வம் தேடுங்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விளம்பரம்

யாழ்ப்பாண மாநகரசபை

### அறிவித்தல்

1968-ம்ஆண்டிற்கு ஆயுள் வேத மருந்துச் சரக்குகள் விநியோகம் செய்வது சம்பந்தமான கேள்விகள் 16-1-68-ம் திகதி நண்பகல் 12 மணிவரைஏற்றுக்கொள்ளப்படும்

இதன்கீழ் கையொப்பமிட்டிருப்பவருக்கு விண்ணப்பித்து ரூபா5/-ஐசெலுத்தியதன் பேரில் கேள்விப் பத்திரங்கள் வழங்கப்படும்.

கட்சன் செல்வராசா,
மாநகரசபை ஆணையாளர்.
மாநகரசபை அலுவலகம்,
யாழ்ப்பாணம், 24-12-67.
393

## காரைநகர்

### இந்துக்கல்லூரி

9-ம், 11-ம், தர வகுப்புகளுக்குச் சேர்வதற்கு விண்ணப்பப் பத்திரங்கள் 15-1-68 வரையும் ஏற்றுக்கொள்ளப்படும். சகல துறைகளிலும் விசேஷ ஆசிரியர்கள் கற்பிப்பார்கள். விடுதி வசதிகளும் ஒழுங்கு செய்யப்படும். விபரங்களுடன் அதிபருக்கு விண்ணப்பிக்கவும்.

ஆ. தியாகராசா,
(M. A. M. Litt),
அதிபர்.

காரைநகர்,
21-12-67 389

வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க

## ருவின்ஸ் வென்றது

யாழ்ப்பாணம், வியாழன் நல்லூர் அரசடி ருவின்ஸ் விளையாட்டுக்கழகத்தின் 'பி' பிரிவுக்கோஷ்டிக்கும் யாழ்ப்பாணம் பேல் மெற்றல் இன்டஸ்றீஸ் விளையாட்டுக் கழகத்துக்குமிடையே நடைபெற்ற சினேகிதபூர்வமான உதைபந்தாட்டப் போட்டியில் ஆரம்பத்திலிருந்து முடிவுவரையும் கடுமையாக மோதிய நல்லூர் ருவின்ஸ் கோஷ்டி 2—0 கோல்களால் எதிர்க்கோஷ்டியைத் தோற்கடித்தது. பரமேஸ்வராக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டியில் இரு கோஷ்டியும் நன்ருகவே ஆடின. இடைவேளைக்கு முன் நடைபெற்ற ஆட்டத்தில் ருவின்ஸ் கோஷ்டியின் முன்னணி வீரர் உருத்திரநாதன் அருமையாக ஆடி இரு கோல்களைப் போட்டார் இக்கோஷ்டியின் காப்டன் கோமூர்த்தி பரமநாதன், மகேந்திரன் ஆகியோரின் ஆட்டம் போட்டிக்கு மேலும் விறுவிறுப்பைக் கொடுத்துக்கொண்டிருந்தது குறிப்பிடத்தக்கது. இப்போட்டிக்கு திரு. சி. கோபாலகிருஷ்ணன் மத்தியஸ்தராகக் கடமையாற்றினுர். —— [வி. நி.]

## 15 லட்சம் ரூபா சேதம்

ஊர்காவற்றுறை, புதன் சமீபத்திய வெள்ளப் பெருக்கால் தீவுப்பகுதியில் வெங்காயச்செய்கை பெரிதும் பாதிக்கப் பட்டது. சுமார் 15 லட்சம் ரூபா நஷ்டமே பட்டுள்ளதுஎனத் தீவுப்பகுதி எம்.பி. திரு.நவரத்தினம் உணவு மந்திரிக்கு அனுப்பியுள்ள மகஜரில்தெரிவித்துள்ளார்.




## 18 கோஷ்டிகள் மோதும் போட்டி

யாழ்ப்பாணம், வியா. யாழ்ப்பாணம் சனசமூக நிலையங்களின் விளையாட்டுச் சங்கத்தின் சார்பில் உதைபந்தாட்டப் போட்டி இம்மாதம் 28-ந் திகதி ஆரம்பமாகவிருக்கிறது.

இச்சுற்றுப்போட்டியில் ஏறக்குறைய பதினெட்டு சனசமூகநிலையக் கோஷ்டிகள் பங்குபற்றவுள்ளன. பரமேஸ்வராக்கல்லூரி மைதானத்தில் இப்போட்டிகள் நடைபெற ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. (நி)

## வெள்ளிக்கிண்ண சுற்றுப் போட்டி

யாழ்ப்பாணம்,வியா. யாழ்ப்பாண உதைபந்தாட்டச் சங்கத்தின் ஆதரவில் நடைபெறவிருக்கும அப்போதிக்கரி வெற்றிக்கிண்ணத்திற்கான லீக் சுற்றுப் போட்டி அடுத்த வருடம் ஜனவரி முதல் திகதி ஆரம்பமாகவிருக்கிறது. இப் போட்டிகள் யாழ்ப்பாண விளையாட்டரங்கில் நடைபெறும். முதல் ஆட்டத்தில் வல்வெட்டித்துறை புளூஸ் கோஷ்டியும் தெலலிப்பளைஒலிம்பிகஸூம் மோதும். ——

## உதயதாரகை சுற்றுப் போட்டி முடிவுகள்

குரும்பசிட்டி. புதன் குரும்பசிட்டி உதயதாரகை மன்றச் சுற்றுப்போட்டி அமைப்பின்கீழ் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி மைதானத்தில் போயிட்டி மகாஜன விளையாட்டுக்கழக இரண்டாம் பிரிவுக் கோஷ்டிக்கும் ஊறணி சென். அநதனீஸ் இளைஞர்கழக 2-ம் பிரிவுக் கோஷ்டிக்குமிடையே நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டியில் போயிட்டிக் கோஷ்டி 4-1 கோல்களால் வெற்றிபெற்றது இடைவேளையின்போது கோல் எண்ணிக்கை 3-0 இருந்தது. சென் அந்தனீஸ் கோஷ்டி ஆட்ட இறுதியில் ஒருகோல் போட்டுக்கொண்டது. திரு எஸ். நடராசா இவ் ஆட்டத்திற்குமத்தியஸ்தராகக் கடமையாற்றினுர்.

இதே சுற்றுப்போட்டியில் குப்பிளான் விக்னேஸ்வரா சனசமூக நிலையமும் தெல்லிப்பழை பாலா ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழகமும் கலந்துகொண்ட முதற்பிரிவு உதைபந்தாட்டப் போட்டியில் குப்பிளான் கோஷ்டி 4-3 கோல்களால் எதிர்க்கோஷ்டியை தோற்கடித்தது. இவ் ஆட்டத்திற்கு திரு. தனபாலசிங்கம் மத்தியஸ்தம் வகித்தார்.

## வீடிழந்த......

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

காரியாலயங்களுக்கு லீவு விடப்பட்டுள்ளதால், வெள்ளநிவாரணவேலைகளில் தாமதம்ஏற்பட்க்கூடும். வீடிழந்த அகதிகளுக்கு நிவாரணம் கிடைத்தாலும், மீண்டும் வீடுகட்டுவதற்குப் பல வாரங்கள் செல்லுமாம்.

ஜனவரி 4-ம் தேதி பாடசாலைகள் டிசம்பர்விடுமுறை முடிந்து மீண்டும் ஆரம்பிப்பதால், சிலபாடசாலைகளில் தஞ்சமடைந்துள்ள அகதிகளுக்குஇக்கட்டானநிலைமை ஏறபட்டுள்ளது. இதன் காரணமாக இப்பாடசாலைகளின் ஆரம்பதினம் பின்போடப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

## வரி விளம்பரம்

### இலவசம்

மில்க்வைற் பார் சோப் மேலுறைகள் ஐந்து சேகரித்து தருபவர்களுக்கு 31-1-1968 வரை ஓர் அழகான காந்திய நீதிக் கலண்டர் இலவசமாக வழங்கப்படும். மில்க்வைற் சோப் தொழிற்சாலை, யாழ்ப்பாணம். 2007

### கல்வி

ஆங்கிலம் ஆரம்பத்திலிருந்து க. பொ. த. (சாதாரண/உயர்தர) காலை, மாலை வகுப்புகளும், போயாவும், முதல் நாளும் விசேட வகுப்புக்களும் அனுபவமுள்ள ஆசிரியரால் 1-1-68 தொடக்கம் நடாத்தப்படும். உடன் விண்ணப்பிக்கவும். வர்த்தகக் கல்லூரி, பருத்தித்துறை. 2195

### தேவை

ஆள்:
மானிப்பாயில்நெல், அரிசி, மிளகாய் குத்தும் மில்லுக்கு வேலை அனுபவம்உள்ள ஆள் தேவை. விபரங்களுக்கு நேரில் வரவும். திருமதி P. செல்வநாயகம், சுதுமலை தெற்கு,மானிப்பாய். 2593

### வாடகைக்கு

வீடு:
யாழ்ப்பாணம் இந்துமகளிர் கல்லூரிக்கு அண்மையில் மின்சார வசதி உடைய கல்வீடு வாடகைக்கு உண்டு. செல்லப்பா சதாசிவம், 72/2 றெயில்வே கிழக்கு ஒழுங்கை, கந்தர்மடம், யாழ்ப்பாணம். 2015

### தவறிவிட்டது

கூப்பன்:
முருகேசு என்பவரது அரிசிக் கூப்பன் புத்தகம் பெரியகடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் இல. 25, முதலாம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம் என்னும் விலாசத்தில் சேர்ப்பிக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். 2014

### விற்பனைக்கு

மோட்டார்சைக்கிள்:
2சிறீ தொடரில் B.S.A [1.75 HP] மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: வ. தம்பிப்பிள்ளை, துன்னாலைதெற்கு,கரவெட்டி. 2011

காணி:
எழுதுமட்டுவாள்- இளாலி கடற்கரை மாதாங்கோவிலுக்கு அருகேயுள்ளதும் விடத்தற்பளை ஊரெல்லைத் தெருவுக்கு அருகேயுள்ளதும் தென்னை, பனை உள்ளதும் தோட்டச்செய்கைக்கு உகந்ததுமான 35 பரப்புக்காணி விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: கே. மாணிக்கம். பிஸ்கால் பென்சனியர், மறைவன்புலவு, சாவகச்சேரி. 2013

## அத்துளு குடிநீர் விநியோகம்

கரவெட்டி, புதன் கரவெட்டி மேற்கு மத்தொனி, சண்டில் வட்டாரங்களில் வாழும் ஹரிஜன மக்களின் தண்ணீர் தட்டுப்பாட்டை அத்துளு குடிதண்ணீர்த் திட்டத்தின் மூலம் நீக்குமாறு மத்தொனி திருவள்ளுவர் சனசமூக நிலையத்தினர், உள்ளூராட்சி அமைச்சருக்கும், உள்ளூராட்சி உதவி ஆணையாளருக்கும் அனுப்பிய மகஜரைத் தொடர்ந்து கடந்த வாரம் தண்ணீர் விநியோக என்ஜினியர், குறித்த கிராமங்களுக்கு விஜயம்செய்து பார்வையிட்டு கிராம மக்கள் அத்துளு தண்ணீர் திட்டத்தின் மூலம் பயன்பெறுமுகமாக இரு நீர் பெறும் நிலையங்களைத் தெரிவுசெய்துள்ளார். ——

சாவகச்சேரி, புதன் சமீப வெள்ளப்பெருக்கால் சேதமடைந்த நாவற்குழிப் பகுதி பேச்சியம்மன் ஒழுங்கையை அப்பகுதியைச் சேர்ந்த தொண்டர்கள் சிரமதானமூலம் செப்பனிட்டனர்.

வீடுகள் தோறும் சென்று விற்கும்

சமயோசித விற்பனையாளர்

லீவர் பிரதேர்ஸ் [இலங்கை] லிமிடட் தாபனத்தார், ஆங்கிலம், தமிழ் நன்கு பேசக்கூடிய இளம் நங்கையர்களை யாழ்ப்பாணக் குடாநாட்டில் வீடுகள் தோறுஞ் சென்று விற்கும்சமயோசித விற்பனையாளர்களாகச் சேர்க்க விரும்புகின்றுர்கள். இதற்குத் தகைமையுடையவர்களென கருதுபவர்கள் யாழ்ப்பாணம் ''பாம்கோட்'' என்ற ஹோட்டலில் 1968-ம் ஆண்டு ஜனவரிமாதம் 4-ந் தேதி பிற்பகல் 1-00 மணிக்கு நேர்முகப் பரீட்சைக்குவருமாறு கேட்கப்படுகின்றுர்கள்.

கோயில் தேவைகளுக்கும், விவாகம் முதலிய
விசேஷ வைபவங்களுக்கும் உபயோகமான

அபிஷேக சந்தனம்

கோயில் அபிஷேக திரவியங்கள்,
வாசனை மிக்க பன்னீர்
பரிமளம் நிறைந்த சந்தன வில்லைகள்

விளைவு நூடம்

கிடைக்குமிடம்

சுந்தரம் பிரதர்ஸ்

மருந்துச் சரக்கு வியாபாரம்
[புதிய பஸ் நிலையத்துக்கு அருகாமை]
73, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ். பிராந்தியத்தில்

# பெற்ரேல் ஆராய்ச்சி முடிவு அடுத்த அக்டோபரில் தெரியும்

யாழ்ப்பாணம், புதன்

1968-ம் ஆண்டு அக்டோபர் மாதத்தில யாழ்ப்பாணப் பிராந்தியத்தில் பெட்ரோல் ஆராய்ச்சி பற்றிய முடிவுகள் தெரியவருமென நம்பத்தகுந் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

பருத்தித்துறை தொடக்கம் முல்லைத்தீவு வரையிலுள்ள பகுதிகளில் பெட்ரோல் ஊற்றுகள் பற்றி ஆராய்ந்தபோது பெட்ரோல் கிடைக்கக்கூடிய சாத்தியமேதும் இல்லையென்றும் தீவுப்பகுதியில் ஆரம்ப ஆராய்ச்சி பயனளித்துள்ளதென்றும் இந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இங்கிருந்து பிரான்ஸ் நிபுணர்களினல் எடுத்துச்செல்லப்பட்ட மாதிரிமண் ஆரம்ப ஆராய்ச்சியில் திருப்தியளித்திருக்கும் அறிகுறிகள் உள்ளதாக அமைந்துள்ளதென்றும், தொடர்ந்து 1968 அக்டோபரில் ஆராய்ச்சி செய்து முடிவுகள் தெரியப்படுமென்றும் தெரியவருகிறது. தற்போதைய ஆரம்ப ஆராய்ச்சி முடிவுற்றபின் சிலாபம், குருநாகல் ஆகிய பகுதிகளின் இடைப்பட்ட பிரதேசங்களிலும் புத்தளம், கற்பிட்டிக்கிடைப்பட்ட பகுதிகளிலும் தொடர்ந்து ஆராய்ச்சிசெய்யப்படுமென்றும் அறியப்படுகிறது. (நி)

# கதவைத தட்டி அறைக்குள் புகுந்தார்களாம்

## சிப்பாய்கள இருவர்மீது சந்தேகம்

காங்கேசன்துறை, புதன்

இரவுநேரத்தில் காங்கேசன்துறைப்புகையிரதநிலைய விடுதிக்குள் சிலர் அத்துமீறிச்சென்று அங்குள்ள ஒரு அறையில் தட்டி கதவு திறக்கப்பட்டதும் உட்புகுந்ததாகவும் வீட்டில் தங்கியிருந்தவர்கள் கூக்குரலிட்டு சத்தமிட்டதாகவும் புகையிரத நிலையத்தில் காவல்புரிந்த பொலிசார் இச்சத்தத்தைக் கேட்டு ஓடிவந்து ஓட்டம் பிடித்த நபர்களைப் பிடித்ததாகவும் தெரிகிறது.

பிடிபட்ட இரு நபர்களையும் பொலிசார் றிமாண்டில் வைத்து பிறகு பிணையில் விடுத்தனர். பலாலிராணுவ முகாமைச் சேர்ந்த சிப்பாய்கள் என்று கூறப்படும் இவ்விருநபர்கள்மீதும் பொலிசார் விரைவில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யவிருக்கிருர்கள்.

# பஸ் கட்டணவித்தியாசத்துக்கு பாதை தூரம்தான் காரணம

## மதகு திருத்தப்பட்டதும் வழமையான சேவை

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாணம் — கண்டி பாதையில் செம்மணிக்கண்மையில் உள்ள மதகு பழுதுற்றமையால் அதன்வழிச் செல்கின்றர் வாகனங்கள் கோப்பாய்—கைதடி ஊடாகச் செலுத்தப்பட்டு வருகின்றன. அதனுல் ஏற்படும் பாதைத் தொலைவினுலேயே பொதுமக்களிடமிருந்து பாதையளவுக்கமைய பணம் அறவிடப்படுகிறதென்று யாழ்ப்பாணம் இலங்கைப் போக்குவரத்து முகாமையாளர் தெரிவித்துள்ளார்.

மேலும் அவர் செம்மணி மதகு விரைவில் சீராக்கப்பட்டுவிடுமென்றும் மதவு திருத்தப்பட்டவுடன் போக்குவரதது வழமையான பாதையினுல் ஆரம்பித்து வழமையான கட்டணம் அறவிடப்படும் என்றும் தெரிவித்துள்ளார். [நி.]

# தமிழ்நாடு எழுத்தாளருக்கு ஈழத்தவர் தலைவர்

சென்னை, டிச. 26

தமிழ்நாடு எழுத்தாளர் சங்கத்தின் புதிய தலைவராக ஈழத்தவரான திரு. எஸ். சிவபாதசுந்தரம் தெரிவு செய்யப்பட்டிருக்கின்ருர்.

தற்பொழுது இந்தியாவில் தங்கியிருக்கும் திரு. சிவபாதசுந்தரம் இலங்கையில் முன்னர் ஈழகேசரி பத்திரிகையின் ஆசிரியராகவும், இலங்கை வானெலியில் தமிழ்நிகழ்ச்சி அதிகாரியாகவும் இருந்துள்ளார். பிரிட்டிஷ் ஒலிபரப்பு கூட்டுத்தாபனத்தின்மூலம் லண்டனில் ஒலிபரப்புக் கலையில் விசேஷ பயிற்சிபெற்றஇவர் எழுதிய 'ஒலிபரப்புக்கலை' என்றநூல்' [இந்தியசாகித்திய மண்டலத்தின் முதல் பரிசைப்பெற்ற தமிழ்நூலாகும். 'புத்தர் அடிச்சுவட்டில்', 'மாணிக்கவாசகர் அடிச்சுவட்டில்' என்ற நூல்களையும் இவர் எழுதியுள்ளார்.

## வடமாகாண......

[1-ம் பக்கத் தொடர்ச்சி

வதில்லை. ஒவ்வொரு கல்லூரிக்கும் ஒவ்வொரு தனித்தன்மையுண்டு. ஆகையினுல் அதிபரின் சம்மதமின்றி இடமாற்றம் செய்வது அக் கல்லூரியின் திட்டங்களுக்கு மாருனது.

ஓர் ஆசிரியர் இடம்மாறி இன்னெரு ஆசிரியர் அவருடைய இடத்தை நிரப்புவதற்கு வருவதற்குப் பலகாலம் செல்வதினுல் கல்லூரியில் மேலும் பல கஷ்டங்கள் ஏற்படுகின்றன. இதன் பயனுக ஆசிரியர்களும்மாணவர்களும் சொல்லமுடியாத கஷ்டங்களுக்கும் மனக்கிலேசங்களுக்கும் ஆட்படுகின்றனர். சில ஆசிரியர்கள் தங்கள் வேலையில் ஊக்கமும் இழந்துவிடுகின்றனர்.

இந்தப் பிரச்னை அவசியம் தீர்க்கப்படவேண்டியதொன்று.

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலவீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1967-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 28 ந்திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

ராஜாஜி கருத்து:

# இந்திரா நிராகரிப்பு

புதுடில்லி, டிச. 26

அரசியல், பொருளாதார பிரச்னைகள் தீரும்வரை இந்திய அரசியல் சாஸனத்தின் 17-வது ஷரத்து செயல்படுவதை நிறுத்திவைக்கவேண்டும் என்று திரு. சி. ராஜகோபாலாச்சாரியார் தெரிவித்த ஆலோசனையை பிரதமர் இந்திராகாந்தி நிராகரித்துவிட்டதாக அறியப்படுகின்றது.

அமெரிக்கா

# நத்தார் விபத்துக்களில் 600 பேர் மரணம்

வாஷிங்டன் டிசெ. 26

அமெரிக்காவில் நத்தார் பண்டிகைக் கொண்டாட்டங்களில் தெரு விபத்துக்களில் உயிரிழந்தோர்தொகை 600க்கும் அதிகமென அறிவிக்கப்பட்டுள்ளது.

## மர்மக் கல்வீச்சு

அச்சுவேலி, புதன்

அச்சுவேலி தெற்கிலுள்ள ஒருவருடைய வீட்டில் நேற்று நள்ளிரவில் இருந்து மர்மக் கல்வீச்சு நடைபெறுகிறதாம்.

எங்கிருந்துவருகிறதென்று கூறமுடியாத அளவுக்கு அவ்வீட்டிற்குள் வீசப்படும் கற்கள் அவ்வீட்டில் உள்ளவர்களுக்குப் பீதியையும், இப்பகுதி மக்களிடையே ஒரு பரபரப்பையும் ஏற்படுத்தியுள்ளதாகக் கூறப்படுகிறது.

## சந்தைப்பகுதி...

(1-ம் பக்க தொடர்ச்சி)

யாழ்ப்பாண பீட்றூட் கிழங்கு விவசாயிகளுக்கு அரசாங்கத்தினல் கொடுக்கப்படும்விதைகிழங்கு தரம்குறைந்ததாகக் காணப்படுகிறது. இதனுல் விவசாயிகள் இக்கிழங்கை அதிக விலைக்கு விற்கமுடியாமல் இருக்கிறது எனவே பீற்றூட் கிழங்குப் பயிர்ச்செய்கையாளர்களுக்கு ஊக்கமும் உற்சாகமும் அளிக்ககூடிய விதத்தில் சந்தைப் பகுதியினர் தரமான விதை பீற்றூட் கிழங்கைப் பெற்றுக் கொடுக்கவேண்டும்.

கத்தரிக்காய் பயிர்ச்செய்கையாளர்களிடமிருந்து சந்தைப்பகுதியினர் கூடியளவு கத்தரிக்காய்களையும் அதிகம் கழிக்காமல் பெற்றுக் கொள்ளவேண்டும்.

யாழ்ப்பாணத்திலிருந்து தென்இலங்கைக்கு ஏற்றுமதியாகும் ரூேமா இனத்தைச்சேர்ந்த தக்காளிப் பழத்தை சந்தைப் பகுதியினர், தக்காளிப்பழப் பயிர்ச்செய்கையாளரிடமிருந்து அதிக விலைக்குப் பெற்றுக்கொள்ளவேண்டும் [கொழும்புப் பகுதியில் யாழ்ப்பாணத்தின் மார்கிளோ இனத் தக்காளிப் பழத்தைவிட ரூேமா இனத்தைச்சேர்ந்த தக்காளிப் பழத்துக்கே அதிக கிராக்கியுள்ளது.]

இக் கோரிக்கைகள் யாவும் பரிசீலனைசெய்யப்பட்டு பயிர்ச்செய்கையாளர்களுக்குத் திருப்தியளிக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமென சந்தைப்பகுதி கமிஷனர் உறுதியளித்தார்.

இக் கூட்டத்தில் வடமாகாண உதவிக்கமிஷனர் திரு. என். வாமதேவனும் மற்றும் விவசாயப்பகுதி அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

வேலைநிறுத்த நிலைமை

# 50 தந்தி ஊழியர் நேற்று திரும்பினர்

கொழும்பு, செவ்.

சம்பளஉயர்வுகோரி நடைபெறும் வேலைநிறுத்த நிலைமையில் இன்று குறிப்பிடக்கூடிய மாற்றங்கள் தென்பட்டன. தோட்டப்பகுதிகளில் தற்பொழுது சுமார் 32 ஆயிரம் தொழிலாளர்கள் மட்டுமேஇன்னும் வேலைநிறுத்தம்செய்கின்றனர்.

தந்தி ஊழியர் வேலைநிறுத்தநிலைமையிலும் இன்னும் முக்கிய மாறுதல்ஏற்பட்டது. வேலைநிறுத்தம் செய்யும் தந்திஊழியர்களில் 50 பேர் இன்று வேலைக்குத் திரும்பினர். இன்று காலையில் 10 பேர் வேலைக்கு வந்தனர். பிற்பகலில் 40 பேர் திரும்பினர். இவர்களில் ஒருவர் மிகவும் சிரேஷ்ட 'கேபல்' இணைப்பாளர்என்று போஸ்மாஸ்டர் ஜெனரல் அறிவித்துள்ளார்

சின்ன வெங்காய விற்பனையில்

# சில்லறை வியாபாரிகள் அனுபவிக்கும் கஷ்டங்கள்

யாழ்ப்பாணம், புதன்

சின்னவெங்காயம் சம்பந்தமாக யாழ்ப்பாணத்திலுள்ள சில்லறை வியாபாரிகள் பலவித கஷ்டங்களை அனுபவித்து வருகின்றனர். அரசாங்கம் யாழ்ப்பாணத்திலுள்ள வியாபாரிகளை 31 சதமாகவும், கொழும்பிலுள்ள வியாபாரிகளை சுமார் 28 சதமாகவும் விற்கும்படி கூறுகிறது- வெங்காயம் சில்லறை வியாபாரிகளினதுமுக்கியமான விற்பனைப் பொருளாகும். யாழ்ப்பாண வியாபாரிகள் அந்தர் ஒன்றுக்கு 34 ரூபா 75 சதம் கூடுதலாகக் கொடுக்க வேண்டியிருக்கிறது. இவ்விதமிருக்கையில் ருத்தல் 31 சதமாக எவ்விதம் விற்க முடியும். அரசாங்கம் ஒரு அந்தர் ரூ. 34 75 சதமாக வாங்கி ரயில்ஏற்றுமதி செலவையும் கொழும்பிலுள்ள வியாபாரிகளுக்கு அந்தர் ரூபா 26 ஆக விநியோகிக்கிறது.

சாவகச்சேரி, புதன்

கடன்தொல்லையால் ஆறு பிள்ளைகளின் தந்தை தற்கொலை செய்துகொண்டார்.

கைதடியைச் சேர்ந்த முருகன் சின்னட்டி (48 வயது) என்பவரே தற்கொலைசெய்துகொண்டவராவார்.

MANOHARA
JAFFNA
Daily at 4-45, 7-00 & 9-45 p.m. Poya days & publicHolidays at 10-30AM
Edd Byrnes - Chris Noel
in
BEACH BALL
(Technicolor) (Scope)

நியூ காலிங்கன்
[இணுவில்]
தினசரி 6-30, 10-00 மணி
விடுமுறைதினங்களில் 2-30
எம். ஜி. ஆர்.-ஜெமினி
நடித்த
முகராசி

REGAL JAFFNA
4-45, 7-00 & 9-45 P.M.
Jean Sorel & Lisa Gastoni
in
THE MAN WHO LAUGHS
[Eastmancolor] [Adultsonly]

திரையிடப்படுகிறது!
கிங்ஸ்லி [கொட்டாஞ்சேனை]
பிளாஸா [கொழும்பு]
வெலிங்டன் [யாழ்ப்பாணம்]
விஜயா [மட்டுநகர்]
ஸ்ரீகிருஷ்ணு [திருமலை]
28-ம் திகதி முதல்
விஜிதா [ஹட்டன்]
மொடேர்ன் [பதுளை]
சுந்தரராஜன்
நாகேஷ்
முத்துராமன்
ஜெயலலிதா
ஏ. வி. எம்.ராஜன்
நடிக்கும்
மேஜர் சந்திரகாந்த்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org